**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 165 /2021**

**Deposition of P.W. 7**

Name : டாக்டர். திரு. ராம்குமார்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 18.06.2025**

Accused Present.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.04.2021ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு நான் பணியில் இருந்த போது செந்தில் (41) என்பவர் சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன. அவர் சுயநினைவுடன் இல்லை. தலையில் சிதைந்த காயங்கள் இரண்டு இருந்தது அந்த காயங்களில் எலும்பு முறிவும் இருந்தது. மூளையின் சிறிய பகுதி வெளியே காணப்பட்டது. அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்தேன். சி.டி ஸ்கேன் எடுத்து பார்த்ததில் மூளையில் சிறிய ரத்தக்கட்டு இருந்தது. மூளையில் பெரிய அளவில் அழுத்தம் இல்லாததால் ஊசி மற்றும் மருந்தின் மூலம் சிகிச்சை அளித்தேன். தலையின் இடது பக்க பரைட்டல் எலும்பு பகுதியில் முறிவு காணப்பட்டது. அவருக்கு

ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.3. காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் வெட்டுக்கத்தி போன்ற கூர்மையான ஆயுதத்தால் தாக்கும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

காயம்பட்ட நபர் 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வரப்பட்டார். அவருடன் அஜீஸ் என்பவர் வந்தார். காயம்பட்டவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார். ஒருவர் இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணியாமல் வேகமாக செல்லும் போது நிலைதடுமாறி கண்ணாடி போன்ற பொருட்களின் மீது கீழே விழும் போது அந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கூர்மையான வெட்டுக்கத்தியால் வெட்டும் போது வெட்டுக்காயம் ஏற்படும் என்றால் சரிதான்.